
ஆசிரியர் : அ.ம.தாஹாநழீம் – 0771100221

தரப்படடுள்ள உருக்களைக் கவனத்திற் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



A **B** **C** **D** **E**

01) வாசனைத்திரவியம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் பொருளின் குறியீடு எது?

1) C 2) D 3) E


02) வீட்டுவேலை, விளையாட்டு என்பவற்றுக்குப் பயன்படும் பொருட்கள் அடங்கிய தொகுதி,

1) Aயும் Bயும் 2) Bயும் Cயம் 3) Dயும் Cயும்

ஒரு வகுப்பறையிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்த பொழுது அவர்களின் திறமைகள் பின்வருமாறு இருந்தது.

A – பாடும் திறமை பெற்றவர்கள்.
B – வரைவதிலும் பேசுவதிலும் திறமை பெற்றவர்கள்.
C – பேசுவதிலும் பாடுவதிலும் திறமை பெற்றவர்கள்.

03) தரப்பட்ட தரவுக்குப் பொருத்தமான வரைபு எது?



04) ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமையாகும். அம்மாதத்தில் எத்தனை புதன்கிழமைகளும் வியாழக்கிழமைகளும் உள்ளன.

1) 5 உம் 4 உம் 2) 4உம் 5 உம் 3) 5உம் 5 உம்

www.lkedu.lk

புதிய கல்வியாண்டு - 2022

LEARN EASY
KNOWLEDGE IS POWER

ZOOM
வகுப்புக்கள்

Grade 2 - O/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

5ம், 6ம் வினாக்களில் பிழையான கருத்து இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

05) 1) சோற்றின் மூலம் அதிகளவு மாப்பொருள் கிடைக்கிறது.
2) அசுத்தமான நீரை அருந்துவதால் மஞ்சட்காமலை நோய் உண்டாகும்.
3) எளிய பொறிகள் மனிதனின் வேலைக்கு இடையூறாகக் காணப்படுகின்றன.

06) 1) பழங்கள் சமிபாட்டைத் துரிதப்படுத்துகின்றன.
2) அதிக புகையை வெளியிடும் வாகனங்களால் சூழல் மாசடைவதில்லை.
3) பௌர்ணமி தினத்தில் சந்திரன் முழுமையாகக் காட்சியளிக்கும்.

7ம் 8ம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

07)
$$\begin{array}{r} 4\ 5\ 7 \\ +\ 3\ ....\ 5 \\ \hline 7\ ....\ 2 \end{array}$$

1) 0, 6 2) 0, 7 3) 6, 0

08)
$$\begin{array}{r} 8\ 7\ 5 \\ -\ 5\ ....\ 4 \\ \hline 2\ ....\ 1 \end{array}$$

1) 9, 6 2) 8, 9 3) 9, 5

பின்வரும் தொடர்களின் சரியான கருத்தைத் தெரிவு செய்க. ?

09) "வயிற்றெரிச்சல்' என்ற தொடரின் கருத்து யாது?
1) வயிற்று வலி
2) பொறாமையுண்டாதல்
3) கோபம் கொள்ளல்


10) "அவசரக்குடுக்கை" என்ற தொடரின் கருத்து யாது?
1) அவசரமல்லாதவன்
2) அறிவாளி
3) பதற்றக்காரன்


www.lkedu.lk


ஆசிரியர் : அ.ம.தாஹாநஸீம் – 0771100221


1ம், 2ம் வினாக்களின் ஆரம்பத்தில் தரப்பட்ட உருவை ஆக்கப்பயன்படுத்தப்பட்ட உருக்கள் இரண்டையும் தெரிவு செய்க.


01)







1) 


2) 


3) 


02)





1) 

2) 

3) 

3ம் 4ம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.


03) விளக்கு - மண்ணெண்ணெய் எனின் கார் - .....

1) தேங்காய் எண்ணெய் 2) வெந்நீர் 3) பெற்றோல்

04) போட்டிகளில் தோல்வி அடைதல் போல வியாபாரத்தில் ..... அடைதல் ஆகும்.

1) நட்டம் 2) இலாபம் 3) விருத்தி

05) இவ்வுருவில் இனங்காணக்கூடிய முக்கோணம், வட்டம், சதுரம் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் முறையே,




1) முக்கோணம் - 4, வட்டம் - 2, சதுரம் 5

2) முக்கோணம் - 3, வட்டம் - 3, சதுரம் 4

3) முக்கோணம் - 3, வட்டம் - 3, சதுரம் 5

www.ikedu.lk

பின்வரும் கோட்டுப்படத்தின் உதவியுடன் 5ம் 6ம் வினாக்களுக்கு விடை தருக.



06) மாம்பழம் 1 இனதும் அன்னாசிப்பழம் 1 இனதும் விலை யாது?

1) ரூபா. 40 **2) ரூபா. 28** **3)ரூபா. 34**

07) மாம்பழம் 1 இனதும் அன்னாசிப்பழம் 3 இனதும் விலை யாது?

1) ரூபா. 72 **2) ரூபா. 40** **3) ரூபா. 60**

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

08) இன்று ஞாயிற்றுக்கிழமை நேற்று முன் தினத்துக்கும் கடந்த திங்கட்கிழமைக்குமிடையே எத்தனை நாட்கள் இருந்தன.

1) 3 **2) 2** **3) 1**

09) ஒரு விளையாட்டு மைதானத்தில் உள்ள 10 பேர்களிடையே 7 பேர் குடையைப் பிடித்துக்கொண்டும் 5 பேர் தொப்பியை அணிந்து கொண்டும் இருக்கின்றனர். சிலர் தொப்பியை அணிந்துகொண்டும் குடையைப் பிடித்துக்குக் கொண்டும் இருக்கின்றனர். அவ்வாறு தொப்பியை அணிந்து கொண்டும் குடையைப் பிடித்துக் கொண்டும் இருப்பவர்களின் எண்ணிக்கை யாது?

1) 2 **2)10** **3) 7**

10) ஒருவர் தனது மாத வருமானத்தில் 3/10 பங்கை உணவுக்காகவும் 2/10 பங்கை வைத்தியத்திற்காகவும் 1/10 பங்கை ஆடம்பரத்திற்காகவும் செலவிட்டார். அவரிடம் மிகுதியாக இருந்த பணம் ரூ. 6000 எனின், குறித்த நபரின் மாத வருமானம் எவ்வளவு?

1) ரூ. 20000 **2) ரூ. 15000** **3) ரூ. 150000**

www.lkedu.lk

ஆசிரியர் : அ.ம.தாஹாநஸீம் – 0771100221

பின்வரும் தகவலை வாசித்து 01ம், 02ம் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.

நாதனுக்கு வேகமாக ஓட முடியும். குகன் திலிபனை விட வேகமாக ஓடினான். காந்தன் குகனை விட வேகமாக ஓடினாலும் நாதனை வெற்றி கொள்ள முடியாது. ரஞ்சன் மிக வேகமாக ஓடினாலும் திலிபனை வெற்றி கொள்ள முடியாது.

01) தரப்பட்டுள்ள தகவலுக்கு அமைய வேகமாக ஓடுபவர்,

1) குகன் 2) நாதன் 3) திலிபன்

02) குறைந்த வேகத்திலிருந்து கூடிய வேகத்திற்கு ஓடக்கூடியவர்களை ஒழுங்குபடுத்தினால்

1) நாதன், காந்தன், குகன், திலிபன், ரஞ்சன்

2) ரஞ்சன், திலிபன், நாதன், காந்தன், குகன்.

3) ரஞ்சன், திலிபன், குகன், காந்தன், நாதன்

பின்வரும் பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

வானில் ஏழு வர்ணங்கள்
வடிவாய்த் தெரியுது பாரம்மா
இயற்கை ஓவியன் வானத்தே
எழுதிய சித்திரம் இதுதானோ

03) இப்பாடலில் கூறப்படும் காட்சி எவை பற்றியது?

1) காலைக்காட்சி 2) வானவில் 3) மாலைக்காட்சி

04) ஆகாயம் என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல் எது?

1) வானம் 2) இயற்கை 3) ஓவியன்

05) தாயின் வயது மகனின் வயதின் இரு மடங்கிலும் 2 குறைவாகும். தாயின் வயது 38 எனின் மகனின் வயது எத்தனை?

1) 20 வயது 2) 18 வயது 3) 15 வயது

www.ikeau.lk

தொடர்பை அவதானித்து அடுத்து வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

06) அஆஇ → இஈஉ → உஊஎ → ☐


1) ஏஒஓ 2) எஏஐ 3) எஏஓ


07) 3 4 5 → 4 5 6 → 5 6 7 → ☐

1) 7 8 9 2) 5 7 8 3) 6 7 8


8ம் 9ம் வினாக்களுக்கான விடையை அருகே தரப்பட்டுள்ள பொருளினை உயரத்திலிருந்து நேராகப் பார்க்கும் போது அது தோன்றும் விதத்தினை காட்டும் உருவினைத் தெரிவு செய்க.



08) A யின் ஊடாகப் பார்க்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?



1)  2)  3) 

09) B யின் ஊடாக பார்க்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?



1)  2)  3) 

10) கமலினி தன்னிடமிருந்த மொத்தப் பணத்தில் அரைவாசியை சுஜிக்குக் கொடுத்தாள். சுஜி கமலினியிடமிருந்து பெற்ற பணத்தில் கால்வாசியை தனுசிற்குக் கொடுத்தாள், தனுசி தன்னிடமிருந்த ரூபாய் 30 துடன் அவற்றையும் பெற்று ரூபாய் 80 ஆக தனது பணத்தொகையைக் கூட்டிக் கொண்டாள். கமலினி சுஜிக்குக் கொடுத்த பணம் எவ்வளவு?

1) ரூபாய் 50 2) ரூபாய் 200 3) ரூபாய் 80

www.lkedu.lk

ஆசிரியர் : அ.ம.தாஹாநழீம் – 0771100221

A யிற்கும் B யிற்கும் பதிலாக மிகப் பொருத்தமான சோடியைத் தெரிவு செய்க.

01)

மரங்கள்	பழம்	**A**
B	வாழைப்பழம்	மல்லிகை
ஆலமரம்	அன்னாசிப்பழம்	றோஜா

1) மலர்கள், கிழங்கு 2) மலர்கள், பனைமரம் 3) பனைமரம், மலர்கள்

02)

A	பேருந்து	தொடருந்து
யானை	குதிரை	**B**


1) வண்டி - கழுதை 2) கழுதை - வாகனம் 3) வாகனம் - கழுதை

வெற்றுக் கூடுகளில் வரவேண்டிய நியம கணிதச் செய்கைகளுக்கு உரிய குறியீடுகள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

03) 11 □ 6 □ 7 =10 1) **+, -** 2) **-, +** 3) **X, -**

04) 5 □ 3 □ 7 =8 1) **+, -** 2) **-, +** 3) **X, -**

05) **கீழே காணப்படும் A வடிவான பெரிய மரக்குற்றியிலிருந்து B வடிவான சிறிய மரக்குற்றியைப் போல எத்தனை மரக்குற்றிகளைப் பெறலாம்?**



1) 16 2) 8 3) 12

www.ikeu.lk

தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை தருக.

தாமரை மலர் பூத்துச் சிரிக்கும்
இலைமேல் நீர் முத்துப் போல பளபளக்கும்
காற்றில் நீரலைகள் மோதும்
உள்ளத்தை ஈர்க்கும் குளத்தின் அழகு

06) கவிதையில் எதனை முத்து எனக் கூறப்பட்டுள்ளது?

1) தாமரை மலர் 2) குளத்தின் அழகு 3) இலை மேலுள்ள நீர்

07) இங்கு கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்

1) தாமரைப் பூ குளத்தில் பூத்தல்
2) குளத்தில் மீன்கள் காணப்படுதல்
3) காற்றில் நீரலைகள் மோதுதல்

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


08) சுமதியின் ஒரே பிள்ளையாகிய மாலா பாடசாலைக்குத் தாமதமாக வந்தாள், தம்பியுடன் கடைக்குச் சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினாள். இது உண்மையாக இருக்கலாம். இதற்குக் காரணம்,

1) மாலா உலாவித் திரிய விரும்புகின்றமை

2) மாலாவிற்குச் சில சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை

3) மாலாவின் சிறிய தகப்பனாரின் ஒரு மகனும் மாலாவின் வீட்டில் இருக்கின்றமை

09) பின்வரும் உருவில் **ABCD** என்பது ஒரு சதுரமாகும் **BEA** என்பது ஒரு சமபக்க முக்கோணியாகும். பக்கம் **BE** யின் நீளம் 6 மீற்றர் எனின், சதுரத்தின் சுற்றளவு எத்தனை மீற்றராகும்?



1) 36

2) 30


3) 24

10) எனக்கு ஐந்து நண்பர்கள் உள்ளனர். நாங்கள் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் பிறந்த நாள் வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டோம் எனின் ஒரு வருடத்தில் பரிமாறிக் கொள்ளப்பட்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 25 3) 30

ஆசிரியர் : அ.ம.தாஹாநழீம் – 0771100221

பூனை ஒன்று உணவு உண்பதற்கு சென்ற பாதையொன்று கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 1ம் 2ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.



01) பூனை தெற்கு நோக்கி எத்தனை தடவை திரும்பியுள்ளது?

1) 4 2) 5 3) 6

02) பூனை இடது பக்கமாக எத்தனை தடவை திரும்பியுள்ளது?

1) 4 2) 3 3) 5

சம்மாந்துறை தாறூஸ்ஸலாம் மகா வித்தியாலய ஆசிரியர்கள் காலி, கொழும்பு, அனுராதபுரம் போன்ற பிரதான நகரங்களுக்குக் கல்விசார் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர். அவை தொடர்பான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளது. அதற்கேற்ப 3ம் 4ம் வினாக்களுக்கு விடை தருக.

தினம்	நகரம்	பார்வையிட்ட இடங்கள்
1வது நாள்	X	காலிக் கோட்டை, துறைமுகம்
2வது நாள்	Y	கோள் மண்டலம் தேசிய கல்வி நிறுவகம்
3வது நாள்	Z	மிகுந்தலை கலாவெவக் குளம்

03) பௌத்தர்களின் முக்கிய வழிபாட்டுத்தலம் உள்ள நகரத்தைக் குறிக்கும் எழுத்து எது?

1) X 2) Y 3) Z

04) அந்நியர்களால் கட்டப்பட்ட பிரசித்தி பெற்ற கோட்டை உள்ள இடம் எது?

1) காலி 2) அனுராதபுரம் 3) கொழும்பு

05) 1, 2, 3, 4 என்னும் இலக்கங்களிலிருந்து ஒரு தடவைக்கு இரு இலக்கங்களை எடுத்து எழுதத்தக்க இரட்டை எண்களின் எண்ணிக்கை யாது?

1) 2) 6 3) 7

www.ikeau.lk

கீழே ஒரு பந்தி தரப்பட்டுள்ளது. அதனைச் சரியாக வாசித்து கீழுள்ள வினாக்களுக்கான விடையினைத் தெரிவு செய்க.

சுத்தம் சுகம் தரும், நலம் தரும், பலம் தரும் போன்ற சொற்றொடர்கள் சுத்தத்தின் முக்கியத்துவத்தினைப் புலப்படுத்துகின்றன. எவ்வளவு தான் செல்வம் இருப்பினும் ஒருவருக்கு நோய் ஏற்படின் அவரிடம் இருக்கும் செல்வத்தினால் எந்தவொரு பிரயோசனமும் இல்லை. "**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்** என்பது யாவரும் அறிந்த முதுமொழி. ஆகையால் குறைவற்ற செல்வம் நோயற்ற வாழ்வை நாம் வாழ்வதற்குச் சுத்தத்தைப் பேணுவோம். தூய்மையான சுத்தமான புதியதோர் உலகத்தை உருவாக்கச் சிறுவர்களாகிய நாம் திடசங்கற்பம் பூணுவோம்.

06) இப்பந்தியில் பிரதானமாகச் சொல்லப்படுவது,

1) செல்வம் பற்றி குறிப்பிடுகின்றது.
2) சுத்தம் பற்றி குறிப்பிடுகின்றது.
3) கல்வி பற்றி குறிப்பிடுகின்றது.


07) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பழமொழி எது?

1) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
2) சுத்தம் சுகம் தராது.
3) திடசங்கற்பம் பேணுவோம்.

08) ஒரே பருமன் கொண்ட திராட்சை 125g இல் 11 திராட்சைக்கனிகள் இருந்தன. அதில் 375g திராட்சையில் உள்ள திராட்சைக்கனிகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 22 2) 33 3) 44

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

09) 

இம்மரத்தின் நிழல் தெரிகின்ற நேரம் யாது?

1) மு. ப. 6.15 மணியளவில்
2) மு.ப. 10.20 மணியளவில்
3) பி.ப 4.30 மணியளவில்


10) ஒரு படகின் மூலம் முறையே 20kg, 40kg, 60kg, 70kg, 80kg நிறையுடைய ஐந்து வகையான பயணிகள் ஆற்றைக் கடந்தனர். பயணிகளின் அதிகூடிய பாரமாக 100kg ஐ படகு கொண்டு செல்லுமாயின் எல்லாப் பயணிகளும் ஆற்றின் கரையை அடைவதற்கு வள்ளம் ஆற்றில் பயணிக்க வேண்டிய குறைந்த தடவைகள் எத்தனை?

1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

www.ikedu.lk

ஆசிரியர் : அ.ம.தாஹாநழீம் – 0771100221

கோழி அடைகாக்கும் செயற்பாடு படத்தில் காட்டப்பட்டுள்ளது.




01) தரப்பட்டுள்ள உருக்களை சம்பவத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தும் போது சரியான முறை எது?

1) **ABCDE** 2) **EBADC** 3) **BEACD**

முதலில் தரப்பட்ட இரு உருக்களுடனும் பொருந்துகின்ற உருவினைத் தெரிவு செய்க.

02)



1) 2) 3)

03)



1) 2) 3)

04) சமபக்க முக்கோணி, செவ்வகம், சதுரம் ஆகிய தளவடிவங்களில் இருக்கும் சமச்சீர் கோடுகளின் எண்ணிக்கையை முறையே காட்டும் விடை யாது?

1) 3, 2, 4 2) 3, 4, 2 3) 4, 2, 3

www.kedu.lk

2017 ஆம் வருடத்தின் ஒரு குறிப்பிட்ட மாதத்தைக் காட்டும் கலண்டரின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

05)

திங்கள்		5	12		
செவ்வாய்					B
புதன்				21	
வியாழன்	1				
வெள்ளி		A			30
சனி			17		

A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான திகதிகள் முறையே எவை?

1) 27,9
2) 9, 27
3) 10, 28

06) இம்மாதத்தின் பதினாறாந் திகதிக்குரிய தினம் எது?

1) வெள்ளி 2) சனி 3) வியாழன்

ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தை நன்கு விபரிக்கின்ற விடையைத் தெரிவு செய்க.

07) பரீட்சையில் சித்தி பெறுவது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

1) பரீட்சையில் சித்தி பெறுவது கூடாது.
2) பரீட்சையில் சித்தி பெறுவதில் பயம்.
3) பரீட்சையில் சித்து பெறுவது கஷ்டம்

08) மேலே பாய்ந்தால் நிலத்தில் விழ நேரிடும்,

1) மேலே பாய்வதாயின் நிலத்தில் விழ வேண்டும்.
2) மேலே செல்கின்ற எதுவும் நிலத்தில் பட வேண்டும்.
3) மேலே பாயாவிட்டால் நிலத்தில் விழ வேண்டியிருக்கும்.

09) என்னிடம் பல நாணயங்கள் உள்ளன. அவற்றுள் இரண்டைத் தவிர எஞ்சியவை 2 ரூபாய் நாணயம், இரண்டைத் தவிர எஞ்சியவை 5 ரூபாய் நாணயம், இரண்டைத் தவிர எஞ்சியவை 10 ரூபாய் நாணயம். என்னிடம் உள்ள நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 3 2) 8 3) 6

10) பத்து வரையில் உள்ள இரட்டை எண்களை உரோமன் எண்குறிகளில் காட்டும் விடை யாது?

1) II, IV, V, VI, X 2) II, IV, VI, IX, X 3) II, IV, VI, VIII, X

www.ikedu.lk

ஆசிரியர் : அ.ம.தாஹாநஸீம் – 0771100221

ஒரே நேரத்தில் மரதன் ஓட்டப்போட்டியினை ஆரம்பித்த ஐந்து ஓட்டப்போட்டியாளர்கள் அப்போட்டியை முடித்துக்கொண்ட நேரங்கள் கீழே உள்ள நிறுத்தற் கடிகாரகளில் காட்டப்பட்டுள்ளது.

00:55:45	00:50:30	00:50:33	00:42:20	01:03:15
தமீம்	சமீம்	குகன்	சுரேஸ்	திலீப்

01) மரதன் ஓட்டப்போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றவர்

1) தமீம் 1) சமீம் 3) சுரேஸ்

02) போட்டியாளர்கள் போட்டியை நிறைவுசெய்த ஒழுங்குமுறை யாது?

1) சுரேஸ், குகன், சமீம், தமீம், திலீப்

2) சுரேஸ், சமீம், குகன், தமீம், திலீப்

3) சமீம், சுரேஸ், குகன், தமீம், திலீப்

தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 3ம், 4ம் வினாக்களுக்கு விடை தருக.

ஒருவர் தன்னிடமிருந்த பணத்தில் $\frac{1}{4}$ பங்கான பழங்கள் வாங்கச் செலவளித்தார். அதன் பின்னர் அவர் மீதிப்பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை உணவுப் பண்டங்கள் வாங்கச் செலவழித்தார். பின்னர் எஞ்சியிருந்த பணம் ரூ. 75 எனின்,

03) அவரிடமிருந்த மொத்தப் பணம் எவ்வளவு?

1) ரூ. 200 2) ரூ. 300 3) ரூ. 400

04) அவர் பழங்கள் வாங்கச் செலவழித்த பணம் எவ்வளவு?

1) ரூ. 50 2) ரூ. 75 3) ரூ. 100

Contact : 0771100221

சரியான விடையைத் தெரிவு செய்க.

05) ஒரு குழுவில் உள்ள பிள்ளைகளில் பெண்கள் இரண்டு கொடிகள் வீதமும் ஆண்கள் மூன்று கொடிகள் வீதமும் கைகளில் வைத்திருந்தனர். குழுவிலுள்ள பிள்ளைகள் வைத்திருந்த கொடிகளின் மொத்த எண்ணிக்கை 27 எனின், அக்குழுவில் ஆண்களின் எண்ணிக்கை பின்வருவனவற்றில் எது?

1) 2 2) 7 3) 4

06) ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

A = அம்மியும் B = அடிமேல் C = அடி
D = அடித்தால் E = நகரும்

1) B, C, A, D, E 2) B, C, D, A, E 3) B, A, C, D, E

07) 15 ஓட்ட வீரர்கள் 15 நிமிடங்களில் 1km தூரத்தை ஓடுவார்கள் எனின், 35 வீரர்கள் அதே தூரத்தை ஓட எடுக்கும் நிமிடம் யாது?

1) 35 நிமிடங்கள் 2) 15 நிமிடங்கள் 3) 25 நிமிடங்கள்

தரம் 5 மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்த நாட்களின் எண்ணிக்கை வருமாறு

பிரிவு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
5A	😞	😊	😞	😐	😊
5B	😊	😐	😐	😊	😞
5C	😞	😐	😊	😞	😐

அதிக வரவு = 😊 சராசரி வரவு = 😐 குறைந்த வரவு = 😞

08) ஐந்து நாட்களும் கூடுதலான மாணவர்கள் வந்த பிரிவு எவை?

1) **5A** 2) **5B** 3) **5C**

09) மாணவர்கள் மிகக் குறைவாக வந்த தினம் எது?

1) திங்கள் 2) புதன் 3) வெள்ளி

10) ஐந்து மனிதர்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு ஒரே வேகத்தில் ஐந்து மணித்தியாலயங்கள் நடந்து 25கிலோமீற்றர் சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதர் நடந்த தூரம் எவ்வளவு?


1) 5km 2) 4km 3) 1km

Contact : 0771100221

ஆசிரியர் : அ.ம.தாஹாநழீம் – 0771100221


1ம் 2ம் வினாக்களில் குறைந்த தொடர்பு உள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பினைத் தெரிவு செய்க.

01)



1) 2) 3)

02)



1) 2) 3)

வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

03) பேருந்து - எரிபொருள் எனின், பேனை - .....

1) எழுத்து 2) மை 3) நிறச்சாயம்

04) வங்கி - முகாமையாளர் எனின், பாடசாலை - .....

1) அதிபர் 2) ஆசிரியர் 3) மாணவர்

Contact : 0771100221

வசந்தனும் கமலனும் மாலாவின் பிள்ளைகள் ஆவர் குமாருக்கு கமலன் சிற்றப்பா ஆவார்.


05) வசந்தனுக்கும் குமாருக்கும் இடையே உள்ள உறவு முறை என்ன?

1) பெரியப்பா - மகன் 2) அப்பா - மகன் 3) பாட்டன் - பேரன்

06) குமாருக்கு மாலா என்ன முறையானவர்?

1) அம்மா 2) பாட்டி 3) மாமி

ஒரே சதுரமுகியின் மூன்று தோற்றங்கள் இங்கு காணப்படுகின்றன.



07)  இக்குறியீட்டுக்கு எதிரே உள்ள குறியீடு யாது?

1)  2)  3) 

08)  இக்குறியீட்டுக்கு எதிரே உள்ள குறியீடு யாது?

1)  2)  3) 

பின்வரும் தகவல்களைக் கொண்டு 9ம், 10ம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

1kg சீனி + 500g தேயிலை	500g தேயிலை + 250g பருப்பு	1kg சீனி + 250g பருப்பு
ரூபாய் 160	ரூபாய் 220	ரூபாய் 150

09) 500g சீனி + 1kg தேயிலை இன் விலை யாது?

1) ரூ. 252.50 2) ரூ. 250.50 3) ரூ. 240.50

10) 2kg சீனி + 500g தேயிலை + 1kg பருப்பு இன் விலை யாது?

1) ரூ. 630.00 2) ரூ. 620.00 3) ரூ. 625.00

Contact : 0771100221

ஆசிரியர் : அ.ம.தாஹாநழீம் – 0771100221

சொற்றொடர்பை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லை தெரிவு செய்க.

01) மறதி ==> அரம் ==> குணம் ==> மரம்
அமைதி ==> கதவு ==> குருதி ==> அகதி
பந்து ==> அறம் ==> சலவை ==> .....

1) பறவை 2) பல்லி 3) தூரம்

02) தீபாவளி ==> கர்வம் ==> திறப்பு ==> தீர்ப்பு
பாம்பு ==> கடலை ==> கேசாலை ==> பாடசாலை
ஆடி ==> விகாரம் ==> பங்கயம் ==> .....

1) ஆரம்பம் 2) ஆகாரம் 3) ஆகாயம்

பின்வரும் தகவலைக் கொண்டு விடை தருக.

மதிக்குக் கிடைக்கும் பங்கு இரு மடங்கு சந்திரனுக்கும் மும்மடங்கு காந்தனுக்கும் கிடைக்கத்தக்கவாறு 48 அப்பிள்கள் மதி, சந்திரன், காந்தன் ஆகிய மூவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதற்கேற்ப,

03) காந்தனுக்கு கிடைத்த அப்பிள் பழங்களின் எண்ணிக்கை யாது?

1) 24 2) 16 3) 20


04) பகிர்ந்தளிக்கப்பட்ட அப்பிள் பழங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையைப் பெற்றவர் யார்?

1) மதி 2) சந்திரன் 3) காந்தன்

Contact : 0771100221

முக்கோணம் ஆங்கில மொழி பேசக்கூடியவர்கள், வட்டம் சிங்கள மொழி பேசக்கூடியவர்கள், சதுரம் தமிழ்மொழி பேசக்கூடியவர்கள் செவ்வகம் ஹிந்தி மொழி பேசக்கூடியவர்கள்.

05) தரப்பட்டுள்ள தகவலின் படி பிழையான கூற்று எது?



1) B சகல மொழியும் பேசக் கூடியவர்கள்
2) F, C இரு மொழியும் பேசக் கூடியவர்கள்.
3) E, D இரு மொழி பேசக் கூடியவர்கள்.

06) மூன்று மொழியும் பேசக்கூடியவர்கள்

1) **D, B** 2) **C, F** 3) **D, F**

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

07) கட்டடம் ஒன்றைக் கட்டும் போது முதலில் கட்டப்படுவது.

1) சுவர் 2) அத்திவாரம் 3) பத்திரிப்பு

08) பொருள் ஒன்றின் விலையானது மேலுறையில் **Rs. STSM.OT** என ஆங்கில எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி அப்பொருளின் விலை யாது?

1) ரூபா. 4045.80 2) ரூபா. 4314.82 3) 4124.83

09) எனது வயதின் 5 மடங்கிலும் 3 வருடங்கள் அதிகமாகும் எனது அப்பாவின் வயது. என் வயது 9 வருடங்களின் எனின் அப்பாவின் வயது யாது?

1) 42 வயது 2) 45 வயது 3) 48 வயது

10) ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகின்றது. அவற்றின் சரியான ஒழுங்கு முறை யாது?

A - நாளும் தந்திடும் இத்தோட்டம்

B - நல்ல நல்ல காய்கறிகள்

C - எங்கள் வீட்டின் பின்புறத்தில்

D - எழிலாய் விளங்குவது ஒரு தோட்டம்

1) ABCD 2) CDBA 3) DBCA

Contact : 0771100221

www.ikeou.lk

ஆசிரியர் : அ.ம.தாஹாநஸீம் - 0771100221

தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை தருக.

தேடித் தேடி படிப்பவர்
தெளிந்த அறிவை அடையலாம்
ஓடி ஓடி உழைப்பவர்
உயர உயர ஏறலாம்


01) இக்கவிதையில் 'உயர உயர ஏறலாம்' என்பதன் கருத்து யாது?


1) பூமிக்கு மேலே செல்லலாம்.
2) வாழ்க்கையில் முன்னேறலாம்
3) ஏணியில் மேலே ஏறலாம்


02) 'தேடித் தேடி படிப்பவர் தெளிந்த அறிவை அடையலாம்.' என்ற பாடல் வரிகள் உணர்த்தும் பழமொழியைத் தெரிவு செய்க.


1) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
2) எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.
3) கண்டதும் கற்கப் பண்டிதனாவான்.

03) வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




1) 

2) 

3) 


04) நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவத்தின்


1) $\frac{1}{2}$ இலும் குறைவாகும்.
2) $\frac{1}{2}$ இற்குச் சமம்.
3) $\frac{1}{2}$ இலும் கூடியதாகும்.





Contact : 0771100221

05) பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




1) 

2) 

3) 

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.

06) இரண்டு கூம்பகங்களின்அடிப்பகுதிகளை சேர்த்து ஒட்டுவதன் மூலம் பெறப்படும் புதிய உருவில் எத்தனை விளிம்புகள், உச்சிகள் உள்ளன?



1) 12,6 2) 24, 10 3) 20, 10

07) அந்த மனிதரிடம் அவரது வயதைக் கேட்டால் நேராகச் சொல்லமாட்டார். ‘‘என் வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். அந்த இரு எண்களையும் இடம்மாற்றிப்போட்டால் என் வயதில் ஒன்பது கூடி விடும்.’’ என்பார். அப்படியானால் அவர் வயது என்ன?

1) 54 2) 45 3) 35

08) சில பெண்கள் கடைக்குச் சென்றனர். ஒவ்வொருவரும் ஒரே தொகைக்குப் பொருள்களை வாங்கினர். அவர்கள் செலவழித்த மொத்தத் தொகை 203 ரூபாய். எந்தப் பொருளும் 10 ரூபாய்க்குக் குறைந்தது கிடையாது. அப்படி யானால் அந்தப் பெண்கள் மொத்தம் எத்தனை பேர்?

1) 5 பெண்கள் 2) 6 பெண்கள் 3) 7 பெண்கள்

09) ஒரு குதிரை ஒரு பயணத்தின் ஆரம்பத்தில் மணித்தியாலத்திற்கு 5 கிலோமீற்றர் என்ற கதியில் முதல் இரண்டு மணித்தியாலயங்கள் சென்றது. பின்னர் அதன் கதி மணித்தியாலத்திற்கு 3 கிலோமீற்றர் எனக் குறைந்தது. 22 கிலோமீற்றர் பயணஞ் செய்வதற்கு இக்குதிரை எத்தனை மணித்தியாலங்கள் எடுக்கும்?

1) 5 2) 6 3) 7

10) 10 நிமிடங்கள் விரைவாகச் செல்லும் எனது கைக்கடிகாரம் முற்பகல் 7.55 ஐக் காட்டிய பொழுது நான் அலுவலகத்திற்குச் செல்லும் புகையிரதம் புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. புகையிரதம் புகையிரத நிலையத்தை வந்தடைந்த நேரம் யாது?

1) முற்பகல் 7.40 2) முற்பகல் 7.45 3) முற்பகல் 8.05

Contact : 0771100221